Registered as a News Paper in Ceylon ★ விலை: சதம் 15

23 JUN 1971

உங்கள்
பற்றறி றேடியோக்களை
உத்தரவாதத்துடன்
ரான்ஸிஸ்டராக
மாற்ற வேண்டுமா
?
தொடர்பு கொள்ளுங்கள்
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்.


# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்:389


மக்கள் விரும்பி வாங்குவது
எவர் பிறேற் சோப்
மணம் குணம் சுவை நிறைந்த பிறேமா லோட்டஸ் தூள் தேயிலை




பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை.

மலர் 13 ஆனி 7 ரபி:ஆகி 27 (21—6—71) திங்கட்கிழமை இதழ் 129

### சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம

# மே மாதத்தில் மாத்திரம் 1390 பேர் தாயகம் திரும்பினர்

## பிரதிநிதிகள் சபையில் பிரதமர் தகவல்

## சட்டத் திருத்தம் நிறைவேறியது

கோட்டை, ஞாயிறு

**சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்ட திருத்த மசோதா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் அதன் எல்லாக் கட்டங்களிலும் நிறைவேறியது.**

இந்தச் சட்ட திருத்தம் பல திருத்தங்களைப் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா புதிய மசோதாவில் தெரிவித்திருந்தார். இந்தியாவுக்கு ஏழு இந்திய வம்சாவழியினர் திரும்பிச் சென்றால் நான்கு இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கு இம் மசோதா வழிசெய்கிறது.

இன்று பிரதம மந்திரி இம் மசோதா பற்றி சபையில் குறிப்பிடுகையில், கடந்த மே மாதம் மாத்திரம் 1390பேர் தாயகம் திரும்பியுள்ளதாகத் தெரிவித்தார். இலங்கை இந்திய ஒப்பந்தம் முழுவதில் அமுலாவதற்கு இந்திய அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறதெனவும் பிரதமர் சொன்னார்.

பிரதம மந்திரி சபையில் நேற்று முன்தினம் மசோதாவைச் சமர்ப்பித்த பொழுது, ஒப்பந்தத்தின் கீழ் வரும் 9 லட்சத்து 75 ஆயிரம் பேரில் 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் இந்தியாவுக்குத் திரும்பவேண்டுமெனவும் 3 லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார். இதில் இந்தியாவுக்குச்செல்ல 4லட்சம்பேர் மனுச்செய்துள்ளனர். இதில் இதுவரை 84,925 பேர் இந்திய பிரஜைகளாக ஆகியுள்ளனர். இதில் 26,414 பேர் இந்தியா திரும்பியுள்ளனர். தேசிய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் 15,326 பேர் இந்தியா திரும்பினர். கட்டணிவந்த பின் மே மாத இறுதிவரை 11 088 பேர் தாயகம் திரும்பினர். வாசகால பர்மிட் 37,920 பேர் பெற்றுள்ளனர். பர்மிட் புதுப்பிக்கப்படமுடியாதவர்களின்தொகை 14902 வாசகால பர்மிட் முடிந்தும் 4282 பேர் இங்கு தங்கியுள்ளனர். இந்திய பிரஜைகளாகியும் 15210 பேர் வாசகால பர்மிட் பெறாமல் இருக்கின்றனர். ஆறேகால் லட்சம் பேர் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்துள்

(6-ம் பக்கம் பார்க்க)

### இ. பாக். பிரச்சினையில் மத்தியஸ்தம்

## படுகொலைகள் முதலில் நிற்க வேண்டும்

### இந்திரா கண்டிப்பு

புதுடில்லி, ஜூன் 20

"வங்காளதேச மக்கள் பிரச்சினை சம்பந்தமான மத்தியஸ்தம் எதையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதானால் முதலில் கிழக்கு வங்காளத்தில் நடைபெற்று வரும் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும்."

இவ்வாறு இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார். திருமதி காந்தி காஷ்மீரில் தமது பிரயாணத்தை முடித்துக் கொண்டு தலைநகர் திரும்புவதற்கு முன்னர் சிறிநகரில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்குள் வந்துள்ள வங்காளதேச அகதிகள் இங்கேயே நிரந்தரமாக தங்கிவிடமுடியாது ஆனால் அவர்கள் அங்கு சென்று கொலைசெய்யப் படுவதற்காகத்திருப்பி அனுப்பிவிடவும் மாட்டோம் என்றார் திருமதி இந்திராகாந்தி.

வங்காளதேச அகதிகள் பிரச்சினையை உலக சமுதாயத்தின் முன்பாக வைத்து விட்டோம். நிலைமை எவ்வளவு பயங்கரமானது-உலக அமைதிக்கே ஆபத்தானது என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்திவிட்டோம் என்று அவர் மேலும் சொன்னார்.

வங்காள தேசத்தை அங்கீகரிப்பது பற்றி நிருபர்கள் கேட்டதற்கு 'அதற்கான தருணம் இன்னும் வரவில்லை' எனப்பிரதமர் சொன்னார்.

எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தக்கூடுமா என்று கேட்டபொழுது 'எந்த வலுத் தாக்குதலையும் எதிர்நோக்க நாம் தயாராய் இருக்கிறோம்' என்றார் அவர்.

சீனாபற்றி, நிருபர்கள் குறிப்பிட்டபோது 'யாரைக் கண்டும் நாம் அஞ்சத் தேவையில்லை என்றாலும் விழிப்போடு இருப்பது அவசியம்' என்றார்.

காஷ்மீரத்தை பாகிஸ்தானுடன் ஒப்பிடமுடியாது. இங்கு பொருளாதாரம் சிறப்பாக வளர்ந்துள்ளது என்று இன்னொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் சொன்னார். மேற்காசியா

(6 ம் பக்கம் பார்க்க)

## நான்கு எதிரிகளுக்கும் மரண தண்டனை

### பத்தேகம நால்வர் கொலைவழக்கில் தீர்ப்பு

காலி, ஞாயிறு

பத்தேகம நால்வர் கொலை வழக்கில் நான்கு எதிரிகளுக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் காலி அசைஸ் கமிஷனர் திரு டி. வியு.எம் சிறிமன்ன. இவ்வழக்கு காலி அசைஸ் நீதிமன்றத்தில் கடந்த எட்டுத் தினங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்தது.

சென்ற வெள்ளிக்கிழமை விசாரணையின் இடைநடுவில் ஜூரிகள் தெரிவித்த அபிப்பிராயத்தைத் தொடர்ந்து முதலாம் இரண்டாம் ஆறும் எதிரிகளை அசைஸ் கமிஷனர் விடுதலை செய்தது "ஈழநாடு" வாசகர்கள் அறிந்ததே.

மூன்றாவது எதிரி கே பி. ஜி வில்சன், நான்காவது எதிரி தயாபந்து குமாரசிறி, ஐந்தாவது எதிரி ஹலகம கே நந்ததாச, ஏழாவது எதிரி என் டபிள்யு பி குணசேன ஆகிய நால்வருமே மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

தகப்பன், தாய், மகள், மகன் ஆகிய நால்வரையும் பத்தேகம காலி பஸ்ஸில் கீன்பியெல்ல என்ற இடத்தில் வைத்துக் குத்திக் கொலைசெய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவ்வழக்கு காலி மாவட்டத்தையே பெரும் பரபரப்புக்குள்ளாக்கியிருந்தது.

## பௌத்தசாஸனத்தை பாதுகாக்க பிரதமரின் 3 அம்சத்திட்டம்

### மகாநாயக்கதேரோக்கள் இணக்கம்

கோட்டை, ஞாயிறு

பௌத்த சாஸனத்தைப் பாதுகாப்பதற்காக பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்த மூன்று அம்சத் திட்டமொன்றை அஸ்கிரிய மல்வத்தை பீடங்களைச்சேர்ந்த மகாநாயக்க தேரோக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். பௌத்த சங்கத்தையும் பௌத்த ஆலயங்களையும் பாதுகாப்பதற்கு இந்தத் திட்டம் வழிசெய்கிறது. பௌத்த ஆலயங்களின் நிர்வாகம் பாதுகாப்பு ஆதியன பற்றி தேரோக்கள் தமது கருத்துக்களைப் பிரதம மந்திரியிடம் தெரிவித்தார்கள்

பௌத்த சாஸனத்தின் அபிவிருத்திக்கென கலாச்சார அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கை மதகுருமாரின் அபிப்பிராயங்களை அறிவதற்காகவேயென்று கூறிய பிரதமர் அதுவே சட்டமாகிவிடாதென்றார்

மகாநாயகதேரோக்கள் நேற்று முன்தினம் பிரதம மந்திரியை அவரது வாசஸ்தலமான அலரிமாளிகையில் சந்தித்து இப்புதிய திட்டம் பற்றி ஆலோசனை நடத்தினார்கள்.

சமீபகாலத்தில் ஏற்பட்ட பயங்கரவாத குழப்பங்களை துணிவுடன் சமாளித்தமைக்காக பிரதமரை அவர்கள் பாராட்டினார்கள். பயங்கரவாதம் வெற்றிபெற்றிருந்தால் இந்தநாட்டில் ஜனநாயகம், சுதந்திரம், மத உரிமையாவும் பறிபோயிருக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## கேள்வி விளம்பரம்

நெல்லியடிப் பட்டின சபை நூல் நிலயத்திற்கு மின் விநியோகம் கொடுப்பதற்கு (வயறிங் வேலை செய்வதற்கு) 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி மு. ப. 10-00 மணி வரை சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 10/-ம் கேள்விப்பத்திரப் பிணைப் பணமாக ரூபா 50/-ம் இக்காரியாலயத்தில் செலுத்தி 1971ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதி மு. ப. 10-00 மணி வரை கேள்விப் பத்திரங்களை இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்களை இக்காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ச. வ. தேவசகாயம்,
தலைவர்,
நெல்லியடிப் பட்டின சபை,

நெல்லியடிப் பட்டின சபை
அலுவலகம்,
கரவெட்டி,
18-6-1971. 2860


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## வரி விளம்பரம்

### தேவை

தளபாடங்கள் பொலிஸிங் செய்ய அனுபவம் உடையவர்களும் தச்சுத்தொழில் கல்லூரியில் பயின்ற அனுபவம் உள்ளவர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். மொடேன் பேணிச்சர் 79/2, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். போன்: 7364 3202

நாலுக்கு சாலம் இடுபவர்கள் தேவை. தராதரப் பத்திரங்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ், 176, கே. கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம். 3201

## சவுதி அரேபிய மன்னர் கெய்ரோ விஜயம்

கெய்ரோ, ஜூன் 20

சவூதி அரேபிய மன்னர் பைசல் கெய்ரோவுக்கு விஜயம் செய்துள்ளார். எகிப்திய ஜனாதிபதி அன்வார் சதாத்துடன் மேற்காசிய பிரச்னை ஜோர்டான் அரசாங்கத்துக்கும் பாலஸ்தீனக் கொரில்லாக்களுக்குமிடையேயுள்ள தகராறு ஆகியவை பற்றி இருவரும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தேவை

பிறின்ரிங், ரச்சிங் அனுபவமும் 30 வயதிற்குட்பட்டவரும், ஸ்ருடியோவில் வேலை செய்வதற்கு தேவை. விபரங்களுக்கு: மனேச்சர், லக்கி ஸ்ரோட்டோ, மன்னார். 3189

விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை தொழிலாகக் கொள்ள விரும்பும் விவேகமும் எதிர்கால வாழ்வை சிறாக்கும் ஆர்வமுள்ள படித்த இளைஞர் விண்ணப்பிக்கவும். லக்குமி தோட்டம், வெள்ளாங்குளம். 3190

### விற்பனைக்கு

காணி:

காணியின் பெயர் துலுக்கப்பாய். பலாலி கிழக்கு பரப்பு 31. 2 கிணறு. வீடு. வான்பயிருடன் மேச்செய்கைக்கும் இடமுண்டு. விபரங்கட்கு: அப்புக்குட்டி தம்பையா, பலாலி கிழக்கு, காங்கேசன்துறை. 3198

## இளம்பிள்ளை வாதம் அதிகரிப்பு

கொழும்பு, ஞாயிறு

இளம்பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்டுள்ள சிறுபிள்ளைகளின் தொகை நாளுக்கு நாள் கூடிவருவதாக கொழும்பு சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு லேடிறிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் பெருந்தொகையான குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் முன் ஒருபோதும் போலியோ தடுப்பு மருந்து உட்கொள்ளாதவர்களெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உடனடியாக பிள்ளைகளுக்கு நோய் தடுப்பு மருந்தைக் கொடுக்குமாறு பெற்றோர்களை சுகாதார உதவி அதிகாரி டாக்டர் டி. ஏ ஜயசிங்கா கேட்டுள்ளார்.

## பணியாளர்கள் தேவை

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை. சகல விண்ணப்பங்களும் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு 27-6-71க்குமுன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1 இலிகிதர்கள்

தராதரம்: கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் எண் கணிதம் உட்பட 4, பாடங்கள் திறமைச் சித்தியுடன் ஆங்கிலமும் சித்திபெய்தியிருக்கவேண்டும். கூட்டுறவுப்பயிற்சி பெற்றவர்களுக்கு விசேட சலுகை கொடுக்கப்படும்.

வயது: 22—35 வரை

பிணை: தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ரூபா 750/- ரொக்கப்பிணை கொடுக்க வேண்டும்.

வேதனம்: மாதம் ஒன்றிற்கு சகல படிகளும் உட்பட ரூபா 150/-

2. தட்டெழுத்தாளர்:

தராதரம்: கல்விப் பொதுத்தராதரம் ஆங்கிலம் திறமைச் சித்தியுடன் கூட்டுறவுப்பயிற்சி பெற்றவர்களுக்கும் தமிழிலும் டைப் செய்யத் தெரிந்தவர்களுக்கும் விசேட சலுகை கொடுக்கப்படும். ஒரு நிமிடத்தில் 35 சொற்களுக்குக் குறையாமல் டைப் செய்யும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வேதனம்: ரூபா 150/- மாதம் எல்லாப் படிகளும் உட்பட.

பிணை: 750/- கட்டவேண்டும்.

வயது: 22 — 35 வரை.

3. பொருட்கள் சரிபார்ப்பவர்

தராதரம்: கனிஷ்ட தராதர வகுப்புச் சித்திபெய்திருப்பதுடன் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

வேதனம்: ரூபா 120/- சகல படிகளும் உட்பட.

பிணை: ரொக்கம் 500/-

4. விற்பனையாளர்கள்

தராதரம்: கனிஷ்ட தராதர வகுப்புச் சித்திபெய்திருப்பதுடன் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

வேதனம்: ரூபா 120/- சகல படிகளும் உட்பட.

வயது: 22—35 வரை.

பிணை: ரூபா 500/-

5. காவல்காரர்

தராதரம்: 7-ம் வகுப்புச் சித்தியுடன் நடத்தை நற்சாட்சிப்பத்திரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

வயது: 35—45 வரை.

வேதனம் ரூபா 100/- சகல படிகளும் உட்பட

பிணை ரூபா 300/- ரொக்கம்

6. ஆபிஸ் பியோன்

தராதரம்: கனிஷ்டதராதரப் பத்திர வகுப்புடன் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

வயது: 22-30/ பிணை ரூபா 300/- வேதனம்: ரூபா 100/- சகல படிகளும் உட்பட.

சகல உத்தியோகத்தர்களினதும் நியமனம் கூட்டுறவு ஆணையாளரின் அனுமதி பெறப்படும் வரை தற்காலிகமானதாய் இருக்கும். வேதனங்கள் அரசாங்கத்தின் சிபார்சுடன் பின்னர் திருத்தியமைக்கப்படும்.

A. V. Manuelpillai
பொது முகாமையாளர்

ஒப்பம்
ப. கதிரவேலு
தலைவர்
புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
புங்குடுதீவு. 19-6-71 2861

## குடித்துவிட்டுக் கணவன் கொடுமைப்படுத்தினராம்

### 4 பிள்ளைகளின் தாய் தற்கொலை

மாவிட்டபுரம், ஞாயிறு

மது அருந்தும் கணவரின் கொடுமை தாங்கமுடியாது, நாலு பிள்ளைகளின் தாயொருவர் தற்கொலை செய்து கொண்டார் இச்சம்பவம் ஏழாலையில் நடைபெற்றது.

ஏழாலையைச் சேர்ந்த மயிலங்காடு என்னும் இடத்தில் வசிக்கும் வல்லிபுரத்தின் மனைவியான கமலாதேவியே இப்படி மரணமானார்.

நான்கு பிள்ளைகளுக்குத் தாயான இவரை இவரது கணவன் மது அருந்திவிட்டு கொடுமைப் படுத்தியதாகவும் அதனால் மனமுடைந்து இவர் தற்கொலைசெய்து கொண்டதாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

இது குறித்து விசாரணை நடாத்திய ஏழாலைப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. இ. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் மரணமானவரின் மகனும், சகோதரரும் மரணமானவர் நஞ்சருந்துவதைக் கண்டதாகச் சாட்சியம் அளித்ததையடுத்து தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## அமைச்சர் பதில்

தாவடி, ஞாயிறு

இலங்கை சோஷலிச முன்னணியின் யாழ் கிளை 100 ஏக்கர் காணி சம்பந்தமாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த வீடமைப்புநிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமனிடம் சமர்ப்பித்த மகஜர் பற்றி நடவடிக்கை எடுப்பதாக மேற்படி கிளைக்கு அமைச்சர் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.


ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன்—லக்ஷ்மி, நாகேஷ்—ராஜஸ்ரீ
நடித்த
நவக்கிரகம்

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப.2-00 மாலை 5 30
ஜெய்சங்கர், பாரதி,
சுந்தரராஜன், நம்பியார், நாகேஷ்
நடித்த
நீ! கவனி!! காதலி!!!

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா-குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப 2-00, 5-45
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
விடிவெள்ளி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
வஹிதா ரஹ்மான்
ராஜ்குமார்
நடித்த
நீல் கமால்
(வர்ணம், ஹிந்தி)
இத்துடன் 'பிலிம்பெயர்' பரிசளிப்புவிழா காட்சிகள் கலரில் காண்பிக்கப்படும்.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
சிவாஜி - பானுமதி
நடித்த
அம்பிகாபதி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
ராஜன் - நிர்மலா
நடித்த
சக்கரம்

ரீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
M. G. R, சாவித்திரி
P. S. வீரப்பா
நடித்த
மகாதேவி
(புதிய பிரதி)
Daily 6-00 p. m
Raquel Welch
in
FLARE UP
(Color)

பாகிஸ்தானுக்கு உதவுவதை

# உலகவங்கி எதிர்க்கிறது? நியூயோர்க் ரைம்ஸ் தகவல்

நியூயோர்க், ஜூன் 20

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வு காணும்வரை பாகிஸ்தானுக்கு நிதிஉதவி வழங்குவதை உலக வங்கி எதிர்ப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாரிசில் இரண்டு நாள் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் இப்பிரச்னை ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்துமாறு உலக வங்கி ஆய்வுக் குழுவும், சர்வதேச நிதி ஸ்தாபனமும் உதவி வழங்கும் நாடுகளுக்குஆலோசனை கூறியிருப்பதாக நியூயோர்க் ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

உணவு தானியங்கள், மூலப்பொருட்கள் மற்றும் இவைபோன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு 50 கோடி டாலர் நிதி உதவியைப் பாகிஸ்தானுக்கு அளிப்பதென முடிவுசெய்யப்பட்டிருந்தது. இவ்வுதவி நிறுத்தப்படலாமெனச் சொல்லப்படுகிறது.

## தனியார்துறை முடக்கம்

கிழக்குப் பாகிஸ்தானில் தொழிலாளர், டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் வேலைக்குச் செல்லாமையினால் அங்கு தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதையும் அதனால் அங்கு தனியார் துறையில் முடக்கம் ஏற்பட்டிருப்பதையும் பாகிஸ்தான் வானொலி மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருப்பதாக இந்திய வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## பிரி. செஞ்சிலுவை பிரதிநிதிகள் கி. பாக். செல்வர்

லண்டன், ஜூன் 19

பிரிட்டனிலுள்ள செஞ்சிலுவைச் சங்கங்களின் தலைமைக் காரியாலயத்திலிருந்து இரு பிரதிநிதிகள் விரைவில் கிழக்குப் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்வார்கள். கிழக்குப்பாகிஸ்தான் அகதிகளைச் சந்தித்து உதவித் தேவைகளைப் பற்றிக் கேட்டறிந்து வருவதே இவர்களது விஜயத்தின் நோக்கமாகும்.

கிழக்குப் பாகிஸ்தானின் உதவித் தேவைகளை அறிந்தும் பெரிய அளவிலான நிவாரண உதவிகளை மேற்கொள்ளுவதற்கு பிரிட்டனிலுள்ள தர்மநிதி, சமூக சேவைஸ்தாபனங்கள் ஆயத்தங்கள் செய்து வருகின்றன.

# "இந்தியா தாக்கப்பட்டால் பதிலடி கொடுக்கும்"

— பிரதமர் இந்திரா

புதுடில்லி, ஜூன் 20

இந்தியாவை எந்த ஒரு நாடு தாக்கினாலும் அதற்குப் பதிலடி கொடுப்பதற்கு இந்தியா தயாராக இருக்கிறது. இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் வெளியார் தலையிடுவதை எப்பொழுதுமே அனுமதிக்க மாட்டாது. இந்திய மக்கள் அமைதியுடனே இருக்கிறார்கள். ஆனால் வலிந்துவரும் ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தயங்கமாட்டார்கள் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடைபெற்ற கூட்டங்களில் பேசுகையிலேயே இவ்வாறு திருமதி காந்தி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், பாகிஸ்தான் பிரச்னையைக் குறிப்பிட்டு இந்தியா பாகிஸ்தானுடன் நட்புடன் இருக்கவே எப்பொழுதும் விரும்பிவந்திருக்கிறது.

இப்பொழுது கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டிருக்கும் அமைதியின்மை போன்று மற்றப்பகுதிகளிலும் இருக்கிறது. பாகிஸ்தான் மற்றும் இதுபோன்ற பகுதிகளிலும் அமைதியின்மை இருக்கின்றது. பாகிஸ்தான் ஸ்தாபிக்கப்பட்ட நாள் தொடக்கம் அங்கு ஜனநாயக உரிமைகள் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டதே காரணமாகும் என்றார்.

## வெளியேறியோர் நிலங்கள்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறியவர்களின் நிலங்களை மற்றவர்களுக்கு பாகிஸ்தான் அரசு அளித்துவருவது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும் என இந்தியா தெரிவித்துள்ளது. இக்கொள்கை கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறியவர்கள் தமது இடங்களுக்குத் திரும்பி வரலாமென்ற பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானின் கொள்கைக்கு மாறானது என்று அது மேலும் தெரிவித்துள்ளது.

# மகாத்மா காந்தி பற்றி புதிய சோவியத் நூல்

மாஸ்கோ, ஜூன் 20

இந்திய விடுதலை இயக்கத்தை வெகுஜன இயக்கமாக மாற்றிய சாதனையும் மகாத்மாகாந்தியினுடையது. இந்திய மக்களின் விசேஷமாக கிராமப்புற மக்களின் மனோநிலையை மகாத்மா காந்தி நன்குணர்ந்திருந்தார். நூற்றாண்டுகாலமாக துயிலுற்றுக் கிடந்த இந்தியமக்களை தட்டியெழுப்பி, விதிமீது பாவற்றையும் சமத்தினாவிருந்த நிலைமையை போக்கி புதிய பார்வையை அவர்கள் மத்தியில் தோற்றுவித்தார் என்று சோவியத் விஞ்ஞானப் பேரவை இப்பொழுது வெளியிட்டுள்ள 'மோகனதாஸ் கரம்சந்திர காந்தியின் அரசியல் கருத்துக்கள்' என்ற நூலில் ஓ. வி. மார்திஷின் எழுதியுள்ளார்.

மேலும் அதில் காந்தியம், உலகம் பற்றிய தத்துவம் என்ற ஆசிரியர் வர்ணித்தபோதிலும் இந்தியா சுதந்திரத்தை வென்றெடுக்க வேறு யாரையும் விட மகாத்மாகாந்தி உயர்ந்த பணியாற்றியுள்ளார் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

மகாத்மாகாந்தி வகுத்த சத்தியாக்கிரக சாத்வீகப் போராட்டத்தை போருக்கு எதிரான இயக்கங்களை வழிநடத்த பிரயோகிக்கலாம் என்று ஆசிரியர் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் கவனத்திற்கொள்ளத்தக்கது.

மகாத்மா காந்தியின் நூறாவது பிறந்த தினத்தையொட்டியுக் ஒரு நூல் சோவியத் யூனியனில் பிரசுரமானது. மகாத்மாகாந்தி பற்றி முன்னர் பிரசுரமான சோவியத் நூல்கள் விடுதலை இயக்கத்தில் பகைப் புலனில் அவருடைய தத்துவத்தையும் அறநெறிப் போதனைகளையும் ஆராய்ந்தன.

மார்திஷின் எழுதியுள்ள நூல் மகாத்மா காந்தியின் உலக தரிசனத்தின் அரசியல் சமூக உள்ளடக்கத்தையும் அரசியல் துறையில் அவருடையநடைமுறை நடவடிக்கைகளையும் எடை போடுவதாக உள்ளது.

## இரகசிய தஸ்தாவேஜு பற்றிய கட்டுரைகள் வெளியிடத் தடை

வாஷிங்டன், ஜூன் 20

இரகசிய தஸ்தாவேஜு பற்றிய வழக்கில் அமெரிக்க அரசாங்கம் மேலும் வெற்றி பெற்றுள்ளது.

வியட்னாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாடு பற்றிய இரகசிய தஸ்தாவேஜு பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரிக்கவேண்டாமென வாஷிங்டன் போஸ்ட், நியூயோர்க் ரைம்ஸ் ஆகிய இரண்டு பத்திரிகைகளுக்கும் சமஷ்டி அப்பீல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு முன்பாக வியட்னாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாடு பற்றிய தஸ்தாவேஜுகளை வெளியிடுவதைத் தடுக்குமாறு அமெரிக்க அரசாங்கம் கோரி தாக்கல் செய்த மனுவை சமஷ்டி நீதிமன்றம் நிராகரித்தது. ஆனால் இப்பொழுது சமஷ்டி அப்பீல் நீதிமன்றம் இரகசிய தஸ்தாவேஜு பற்றிய கட்டுரைகளை வெளியிட வேண்டாமென்று உத்தரவிட்டுள்ளது. நியூயோர்க் ரைம்ஸ் பற்றிய விஷயத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட அப்பீல் நீதிமன்றம் திங்கட்கிழமை தீர்ப்பளிக்கும் வரை கட்டுரை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு இடப்பட்டுள்ளது.

# இந்திய கடற்படைக் கப்பல் மூழ்கியது

## 33 பேர் உயிரிழப்பு

சென்னை, ஜூன் 20

இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று இன்று கடலில் மூழ்கியதில் அதிலிருந்த 3 அதிகாரிகளும் 30 ஊழியர்களும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இக்கப்பல் சென்னைக்கும் கிழக்கே 250மைல் தொலைவில் கடலில் மூழ்கியது. இவ்விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவில்லை. அக்கடல் பிராந்தியத்தில் உள்ள காலச்சூழ்நிலையே இவ்விபத்துக்குக் காரணமாக இருக்கலாமென கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## முடக்குவாத நோயாளிகளுக்கு பிளாஸ்டிக் விரல்கள்!

லண்டன், ஜூன் 20

முடக்குவாத நோயினால் அவஸ்தைப்படுபவர்களை வெகுவாகப் பாதிப்பது, கை, கால் இணைப்புகளில் ஏற்படும் தாங்கொணாத வலியும் விறைப்பும் தான். பெரும்பான்மையாக நாளடைவில் இந் நோயாளிகள் தம் கை, கால் உறுப்புகளின் சக்தியையும் இழந்துவிடுவதுண்டு. கை கால் உறுப்புகளின் மூட்டுகளை இயங்கச்செய்வதற்கு அவசியமான, இயற்கையாகவே காணப்படும் ஒருவித பசை காய்ந்துபோய் விடுவதாலேயே முடக்குவாதம் ஏற்படுகிறதென வைத்திய ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர்.

எனவே முடக்குவாத நோயாளருக்கும் சிகிச்சை செய்வது மிகவும் சிக்கலானதொரு செயலாக இதுவரை கருதப்பட்டுவந்தது. ஆனால் இப்பொழுது இந் நோயால் பீடிக்கப்பட்டுத் தம் கை, கால் உறுப்புகளின் சக்தி இழந்தவர்கள் மீண்டும் இவ்வுறுப்புக்களின் இயக்கத்தைப் பெறக்கூடிய வண்ணம் செயற்கையான பிளாஸ்டிக் விரல் மூட்டுகளை லண்டனிலுள்ள வைத்தியர்கள் அமைத்துள்ளனர்.

பொலிபுரொட்லீன் என்னும் பிளாஸ்டிக் நுரையிலான இவ்விரல் மூட்டு பாரமற்றது. இலகுவாக இயங்கக்கூடியது. இதனை நோயாளியின் சக்தி இழந்த விரல்மூட்டுகளில் வைத்து இணைத்துவிட்டால், இயற்கையான விரல்களைப் போன்று இவை இயங்கும்.

தென் இங்கிலாந்து விரைட்டனில் சமீபத்தில் நடைபெற்ற ஐரோப்பிய முடக்குவாதவியல் மகாநாட்டில் பிரிட்டிஷ் வைத்தியர்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளனர். இதைவிட, லீட்ஸ் சர்வகலாசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள் மணிக்கட்டு, முழந்தாள், முழங்கை மூட்டுகளையும் இந்தப் பிளாஸ்டிக் நுரையினால் உருவாக்கும் தமது திட்டங்களையும் இம் மாநாட்டில் விரிவாக விளக்கினர்.

## டாக்ஸி விபத்தில் 16, பேர் பலி

கெய்ரோ, ஜூன். 20

கெய்ரோவின் வீதி ஒன்றில் சென்றுகொண்டிருந்த டாக்ஸி ஒன்று ஏரியில் வீழ்ந்ததில் அதில் பிரயாணஞ் செய்த 16 பேர் இறந்தனர். விழா ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்த 3 குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் இதில் பிரயாணஞ் செய்தனராம்.

## கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்க வழி

சென்னை, ஜூன் 26

பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்ற டாக்டர்கள் கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு முறையில் ஆஸ்பத்திரிகளை நடத்துவதால் கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிட்டும். கூட்டுறவு ஆஸ்பத்திரிக்கு அரசாங்கம் மானியமும் உதவிப்பணமும் வழங்கினால் இத்திட்டம் வெற்றி பெறும்.

இவ்வாறு தமிழக கவர்னர் கே. கே. ஷா தமிழ் நாடு டாக்டர்கள்சங்கத்தின் 44-வது மகாநாட்டின்போது பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ஆஸ்பத்திரிக்கு வரும் ஒவ்வொருக்கு என்ன நோய் இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கு 7 வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்றார். இ மகாநாடு சுகாதார அமைச்சர் திரு அன்பழகன் தலைமையில் நடைபெற்றது.

## ஊழலைத்தடுக்க தீவிர நடவடிக்கை

பருத்தித்துறை, ஞாயிறு

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவு ஆரம்ப சங்கம் தனக்குக்கீழ் இயங்கிவரும் 18 இணைப்புச் சங்கங்களிலும், காணப்படும் ஊழல்களை ஒழித்துக்கட்ட தீவிரமாக முயன்றுவருகிறது. இந்நடவடிக்கையின் காரணமாக வெற்றுச்சாக்குகளை ஒப்படைக்காத ஒரு கூப்பன் கடை மனேஜர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். பெருமளவு மைசூர் பருப்பை தனிப்பட்ட வியாபாரி ஒருவருக்கு விற்ற சில கூப்பன் கடைக்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

சித்தன்கேணி கலைவாணி சன சமூக நிலைய புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர், ஆ வயிரமுத்து, உபதலைவர்: க நல்லதம்பி, காரியதரிசி: ஆ குணசிங்கம், உபகாரியதரிசி: பி இராசேந்திரம், தனாதிகாரி: மா தனபாலசிங்கம், போஷகர்: சு நடேசு ஆகியோர் உட்பட 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

பொன்னாலை

## மகாலட்சுமிக்கு கோடி அர்ச்சனை

சுழிபுரம், ஞாயிறு

பொன்னாலையிலுள்ள வரதராசப் பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருக்கும் மகாலட்சுமிக்கு இலட்சார்ச்சனை முடிவடைந்து கோடி அர்ச்சனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களாகத் தினமும் நடைபெற்று வந்த இலட்சார்ச்சனையில் பலர் கலந்துகொண்டனர். கோவில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வரசர்மா கோடி அர்ச்சனை நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்.


தேசிய லொத்தர் சபை

தேவை

தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகள் விற்பனை செய்வதற்கு பின்வரும் தொகுதிகளில் ஏஜெண்டுகள்:

| | |
|---|---|
| ஊர்காவற்றுறை | நல்லூர் |
| வட்டுக்கோட்டை | கோப்பாய் |
| காங்கேசன்துறை | உடுப்பிட்டி |
| உடுவில் | பருத்தித்துறை |
| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |

தொகுதி, விற்பனை நிலைய விலாசம் மற்றும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்க.

502/1, காலி வீதி, கொழும்பு-3.

பொது முகாமையாளர், தேசிய லொத்தர் சபை.

# "கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் கூடாது"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கூட்டுறவு இயக்கம்கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நல்ல முறையில் வளர்ந்து வந்திருக்கின்றது. இப்போது சில அரசியல் தலையீடுகள் காரணமாக இயக்க வளர்ச்சி குன்றி வருவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது என பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் புலோலி கூட்டுறவு சமாஜ மண்டபத்தில் காலஞ்சென்ற திரு சி. மாணிக்கவாசகரின் உருவப்பட திரைநீக்க விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

கூட்டுறவு இயக்க சமாஜ தலைவர் திரு வே. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு கனகசபை உருவப்படத்தை திரை நீக்கம் செய்துவைத்தார்.

திரு துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று இலங்கையில் கூட்டுறவு இயக்கம் நடுச் சந்தியில் நின்றுகொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் நிர்வாக அமைப்புகளில் அரசியல் வைபோகங்களை நியமிக்காது கூட்டுறவு இயக்க அனுபவமுள்ளவர்களையே நியமிக்க வேண்டும்.

உடுப்பிட்டி எம். பி. திரு க. ஜெயக்கொடி பேசுகையில் இந்நாட்டில் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து வந்து கொண்டுவரும் வேளையில் சில சில தீயசக்திகள் இவ்வியக்கத்திற் சேர்ந்து ஜனநாயகத்திற்கும் புறம்பான கொள்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை, காரியாதிகாரி திரு தம்பிமுத்து ஆகியோரும் பேசினர்.

......

கஸ்தூரியார் வீதியில்

## புதியமலகூடம் அமைக்கப்படும்

குருநகர், ஞாயிறு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நவீன வசதி கொண்ட மலசலகூடம் அமைக்க மேயர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வீதியில், கன்னதிட்டிக்கு அண்மையில் இருந்து வந்த பொதுஜன மலசலகூடத்தை மாநகரசபையினர் கடந்தசிலதினங்களுக்கு முன்னர் இடித்து அகற்றியதற்குஇப்பகுதிமக்கள் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து மேயர் திரு. அல்பிரட் சி. துரையப்பா புதிய மலசலகூடம்அமைக்க முயற்சியேற்கொண்டார்.

குடிசன நெருக்கமுள்ள இப்பகுதியில் உள்ளபல வீடுகளில் மலசல கூடங்களில்லாமலிருப்பதால் இப்பகுதி மக்கள் இந்தப்பொதுஜன மலசலகூடத்தை உபயோகித்து வந்ததாகவும் இதைத் திடீரென அகற்றியதால் இவர்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிப்பதாகவும் இப்பகுதி மக்கள் மாநகரமேயர் திரு. அல்பிரட் துரையப்பாவிடமும் வட்டார அங்கத்தவரிடமும் விண்ணப்பித்திருந்ததைத்தொடர்ந்து தண்ணீரால் சுத்தம் செய்யக்கூடிய குழிமலசலகூடத்தைஅமைத்துக் கொடுக்கமேயர் சம்மதம் தெரிவித்து அதற்கான இடமொன்றை பார்வையிட்டதாகவும் தெரிகிறது.

——

## 'புதிய பஸ்களை அனுப்புக'

ஊரதீவு, ஞாயிறு

வடபகுதியில் போதியபஸ்கள் இல்லாமையால் பிரயாணிகள் மிகுந்த சிரமமடைகிறார்கள் என்றும் சேவையைத்திருப்திகரமாக அமைப்பதற்காக பதினைந்து புதிய பஸ்களை அனுப்புமாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் போக்கு வரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்ற வேண்டுகோள் ஒன்றை இலங்கைப் போக்குவரத்துச் சபை வடபிராந்திய அதிபர் திரு வீ. நவரத்தினம் சபைத்தலைவருக்கு விடுத்துள்ளார் என்றும் தெரிகிறது.

——

## சிரசில் இளநீர் அபிஷேகம்

யாழ்ப்பாணம் திங்கள்

புளியங்கூடல் மாரியம்மன் கோவில் வேட்டைத் திருவிழாவன்று நல்லூர் சிவபூசுவராயர் ஆலயப்பஜனைச் சபையினர் நடாத்திய பஜனையின் போது திரு வி.எஸ் பரமானந்தம் நாற்றுக்கணக்கான இளநீர்களைத் தமது சிரசில் அடித்து அபிஷேகம் செய்தார்.

——

மத்தியவங்கி

## தமிழ் மாதாந்த செய்தித் திரட்டு

நாட்டின் பொருளாதார நிலைய மாதாந்த அடிப்படையில் குறிப்புகளோடும் புள்ளிவிபரங்களோடும் கோட்டுப்படங்களோடும் விளக்கும் இலங்கை மத்திய வங்கி மாதந்தோறும் வெளியிடும் ஜனவரி, பெப்ருவரி, மார்ச், ஏப்பிரல் மாதங்களுக்குரிய தமிழ் மாதாந்த செய்தித் திரட்டுகள் கிடைக்கப்பெற்றோம்.

ஒவ்வொரு மாதாந்தச் செய்தித்திரட்டிலும் குறிப்பிடத்தக்க பண்புகள் பல காணத்தக்கதாய் இருப்பினும் ஜனவரி மாதாந்த செய்தித்திரட்டும் ஏப்பிரல் மாதாந்த செய்தித் திரட்டும் சிறப்பாக அமைந்திருந்தன. ஜனவரி மாதாந்தச் செய்தித்திரட்டு அதன் அட்டவணைகளை விரிவாக விளக்கி ஒருசிறப்பு இணைப்பு இதழை வெளியிட்டுள்ளது.

ஏப்பிரல் தமிழ்மாதாந்தச் செய்தித்திரட்டு இலங்கையின் கிராமப்பிரிவில் நிலவிவரும் வேலை, வேலையின்மை தன்மைபற்றிவிரிவான சுவையான புள்ளி விபரங்களோடு விளக்கும் அரிய ஆய்வுக் கட்டுரையைத் தாங்கி வெளிவந்துள்ளது. இக்கட்டுரை இலங்கை மத்திய வங்கியின் பணியாற்றும் கலாநிதி ஒஸ்ரின் பர்ணாந்துவின் கட்டுரையின் தமிழாக்கமாகும்.

சுருக்கமாகக் கூறின் மேற்குறித்த தமிழ் மாதாந்த செய்தித்திரட்டுகள் அனைத்தும் பரந்தவிரிந்த பொருளியல் ஆய்வின் அடிப்படையில் எழுந்தவையாகும்.

உயர்நிலைக்கல்வி மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் கல்விவிரிவுரையாளர்கள் வணிகர்கள் ஆகியோருக்கு இவ்வெளியீடுகள் பயன் பல தருபவையாகும். சிறப்பாக தமிழ் வாயிலாக உயர்நிலைக் கல்வியிலும் மாணவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இடம்பெறவேண்டிய வெளியீடுகளாகும் இவை12 இதழ்களுக்குரிய ஆண்டுக்கட்டணம் ரூபாய் 20/- தனிப்படியின் விலை ரூபா 2/- கிடைக்குமிடம்: பணிப்பாளர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 6-ம் மாடி, வடகோபுரம், இலங்கை மத்தியவங்கி இராணி வீதி, கொழும்பு.

—'கா'

## மிளகாய்ச் செடியில் புதிய நோய்

அம்பன், ஞாயிறு

விஸ்வமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் பெருந்தொகையான ஏக்கர் கணக்கில் பயிர் செய்யப்பட்டிருக்கும் மிளகாய்இனத்தை ஒருவகைப் புதியநோய் பாதித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் புதிய நோயானது மிளகாய் பிஞ்சாக இருக்கும் பொழுது வெள்ளை நிறமாக மாறி பழுத்து விழுந்து விடுகின்றதாம் இந்த முறையே இந்நோய் மிளகாய்ச் செய்கையை அதிகம் தாக்கியுள்ளதால் மிளகாய்ச் செய்கையால் இம்முறை நஷ்டமேற்படலாமோ வென அவர்கள் அச்சம் கொள்கின்றனர்.

......

## கிராம அபிவிருத்தி திட்டம்

வேலணை, ஞாயிறு

வேலணை கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வேலணைமேற்கு வேளுக்குளம் வேலணை கிழக்கு நவக்கைக்குளம், சரவணை தெங்கங்குளம் ஆகிய குளங்களைத்திருத்தி ஆழமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குளங்களைச் சூழவுள்ள காணிகளில் உபஉணவு உற்பத்தி செய்யும் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இக்குளங்களைச் சூழவுள்ள காணிகளைப்பெற்று உணவு உற்பத்தி செய்யும்பொருட்டு காணிச்சொந்தக்காரர்களின் இசைவுசம்பந்தமான ஆலோசனை சேகரிக்கப்பட்டு வருகிறது.

......

## நன்கொடை

அம்பன், ஞாயிறு

ஆழியபுரம் வீதிதிருத்துவதற்கான நன்கொடைப் பணத்தை அரசாங்கம் குடத்தனைக் கிராமசபைக்கு வழங்கியுள்ளது. இதற்கான கேள்விப்பத்திரம் விரைவில் கோரப்படவிருக்கின்றது.

......

## கட்டிடப் பொருள் கூட்டுஸ்தாபனம்

கோட்டை, ஞாயிறு

வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் கட்டிடப் பொருட்களுக்கான கூட்டுத்தாபனம் ஒன்றை அமைத்துள்ளார்.

இக்குழுவின் அங்கத்தினர்களாக திரு. எல். என். டி. மென்டிஸ் திரு. ஆர் ஐ. ஒபயசேகரா திரு. டபிள்யூ. எச். எஸ் விஜயரத்ன திரு. டபிள்யூ என். ஜி வோட்சன் திரு. ஏ. எம். ஏ. அபேசிங்க ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இக் கூட்டுத்தாபனம் முதல் தமது ஆரம்பத்தில்கட்டிட நிர்மாணத்திற்கு வேண்டிய பொருட்களை இறக்குமதி செய்து அரசாங்க இலாகாக்கட்கும் கூட்டுஸ்தாபனங்கட்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும பொது ஸ்தாபனங்கட்கும் விநியோகிக்கவுள்ளது.

......

## ரூ 4000 மேலதிக லாபமாம்

பருத்தித்துறை ஞாயிறு

இ. போ. ச. பிரயாணக் கட்டணங்களை உயர்த்திய தன் பின்னர் பருத்தித்துறை இ. போ. ச. பகுதியில் சுமார் ரூபா 4,000 மேலதிக லாபமாகக் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. இத்துடன் பஸ்வண்டிகளுக்குத்தேவையான உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதினால் மேலும் அதிக பஸ்வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென்றும் அதன்மூலம் மேலும் அதிக லாபத்தைப் பெறக்கூடியவாய்ப்பு ஏற்படுமென்றும் பருத்தித்துறை இ. போ. ச. மேலதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் கட்டண உயர்வுக்குத் தகுந்த முறையில் சேவையின் தரத்திலும் உயர்வு ஏற்படலாமென நம்பப்படுகிறது.

## 50-வது சொற்பொழிவு

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் அருளாணையின்கீழ் நடைபெற்றுவரும் சிவஞான போதத் தொடர் விரிவுரையின் ஐம்பதாவது சொற்பொழிவு நாளை போயாதினத்தன்று முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஆதீனக் கௌரவ சைவசித்தாந்த விரிவுரையாளர் வித்துவான் கணபதிப்பிள்ளை இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். தொடர்ந்து வழமைபோல் திருமுறை ஆய்வுச் சொற்பொழிவும் இலக்கண ஆய்வுச் சொற்பொழிவும் நடைபெறும்.

## கழகம் அமைப்பது பற்றி ஆலோசிப்பர்

யாழ்ப்பாணம், திங்கள்

பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பதற்கு ஒரு கழகம் அமைப்பது பற்றிய பூர்வாங்க ஆலோசனைக்கூட்டம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் முதலியார் செ முத்துத்தம்பி தலைமையில் நாளை நண்பகல் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை சைவப்பிரசாரகர்வித்துவான் க கணபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

——

## திருவிழா

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் பறுளாய் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் தேற்றக்கொடியேற்றத்துடன் ஆரம்பமானது தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும்.

——

## கந்தபுராண படன மகாநாடு நல்லூரில் நடக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இவ்வருட உற்சவத்தையடுத்து கந்தபுராண படனமகாநாடு ஒன்று நடைபெற விருக்கின்றது.

நல்லை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரானைக் காப்பாளராகக் கொண்டு இம்மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் செயற்படவிருக்கின்றன.

——

## பேப்பருக்கு விலைக்கட்டுப்பாடு

கோட்டை ஞாயிறு

செய்தித்தாள் உட்பட பல வகையான பேப்பர்களும் கட்டுப்பாட்டு விலைக்குள் கொண்டுவரப் பட்டுள்ளன. இம்மாதம் 18-ம் திகதி தொடக்கம் இந்தக் கட்டுப்பாட்டுவிலை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. 'கார்ட்போட்' டும் இதனுள் அடங்கும்.

......

ரயில் விபத்தில்

## தம்பதிகள் ஸ்தலத்தில் மரணம்

கோட்டை, ஞாயிறு

நேற்று முன்தினம் பொரளை, மொடல்பாம் வீதியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஒன்றில் புகையிரதத்துடன் கார் ஒன்று மோதியதால் காரில் பிரயாணம் செய்த கணவனும் மனைவியும் ஸ்தலத்திலேயே இறந்தனர்.

## விளையாட்டுப்போட்டி நடைபெறுமா?

பருத்தித்துறை, ஞாயிறு

வடபகுதிப் பாடசாலைகளில் இரண்டாம் தவணையின் நடுப்பகுதியில் இல்லங்களிடையே வழக்கமாக நடைபெற்றுவரும் விளையாட்டுப்போட்டிகளை இம்முறை விசேட அனுமதி பெற்று நடாத்தலாமென்ற நம்பிக்கையில் கல்லூரி அதிபர்கள் சிலர் தமது பாடசாலைகளில் இதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றனர். ஆயினும் நாட்டின் தற்போதைய நிலைமை முன்னிட்டு இப்போட்டிகள் நடைபெறுவது சந்தேகத்திற்குரிய தெனச்சில அதிபர்கள் தெரிவித்தனர்.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 7-ந் திகதி

(21- 6- 71)

மேஷம்: முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முயற்சிசெய்வர் பொறுமை விரும்பத்தக்கது.

ரிஷபம்: சிக்கல்களை மேற்கொள்வதற்குச் சிறந்த நடவடிக்கைகளை எடுப்பீர்கள் குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம்.

மிதுனம்: சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் சிறுபிணக்கும் இடம் உண்டு. வாயுப் பதார்த்தங்களை தவிர்ப்பதுடன் தெய்வநம்பிக்கை நன்மைதரும்.

கடகம்: நீண்டநாட்களின் பின்பு நிம்மதியான வாழ்க்கை இன்று கிடைக்கும், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு புதியமுயற்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கும்.

சிம்மம்: அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும்.

கன்னி: திகைக்கவைக்கும் திருப்பங்கள் ஏற்படும். சிலர் புனைந்துரைகளால் வேதனைப்படுவார்கள் சிறிய விடயத்திற்கும் ஆத்திரம் ஏற்படும். மனத்திடம் வேண்டும்.

துலாம்: கற்கண்டுபோல் இனிக்கும்வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு. வஸ்திரவழியின் மூலம் தனதனம் சேரக்கூடும்.

விருச்சிகம்: பணத்தைக் கொடுத்து பலகையை சம்பாதித்துக்கொள்ளுவீர்கள். தொழில்துறையிலும் சோர்வு தென்படுகின்றது; நிதானபுத்தியுடன் நடக்கவும்,

தனுசு: தந்தைவழி ஆதரவு தவறுதல் கிடைக்கும். தடைகளெல்லாம் தவிடுபொடியாகும் கன்னியமான தினம்.

மகரம்: தங்கக் குணம் மேலிடும் தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். பொன்னான தினம்

கும்பம்: கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும், புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடி வருவார்கள், வெளியூர்ப் பயணமும் ஏற்படலாம்,

மீனம்: தன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடம் உண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## 'பாதையைத் திருத்துக'

பருத்தித்துறை, ஞாயிறு

தேவிபுரம் மத்திய வகுப்பு குடியேற்றத் திட்டத்திற்குச் செல்லும் பிரதான பாதையில் கடந்த சில மாதங்களாக ஆங்காங்கு கற்குவியல் போடப்பட்டிருப்பதினால் விவசாயிகள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் கஷ்டப்படுகின்றனர். எனவே இப்பாதையை உடனடியாகத் திருத்தி பஸ் சேவையையும் அளிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மேற்கண்டவாறு தேவிபுரம் தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு வ. தம்பிராசா போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தனவுக்கும் திரு அனில்முனசிங்காவிற்கும் அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுள்ளார்.

—

## வழுக்கை ஆற்றுக்கு பாலம்

அம்பன், ஞாயிறு

நாகர்கோயில் எழுதுமட்டுவாள் வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் வழுக்கையாற்றுக்கு 100 அடி நீளமான பாலமொன்றினை அமைப்பதற்கான திட்டமொன்றினைத் தயாரித்து அனுப்புமாறு குடத்தனைக் கிராமசபை முதல்வரை அரசாங்கம் கேட்டுள்ளது.

நாகர்கோயில் எழுதுமட்டுவாள் வீதிக்கு பாலம் அமைக்கப்பட்டால் நாகர்கோவிலுக்கும் கண்டி வீதிக்கும் இடைத்தூரம் 3 மைல்களேயாகும். இவ்வீதி திறக்கப்பட்டால் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டம் பெரும்பாலும் நீங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

—

## கோரிக்கை

குருநகர், ஞாயிறு

உயர் பதவிகளில் உள்ள சில நிர்வாக உத்தியோகஸ்தர்கள் சாதாரண வேலை செய்யும் அரசாங்க சிறு சேவையாளர்களை பயமுறுத்தி வருவதாகவும் இவர்களது தொழிற்சங்க உரிமைகளையே உதாசீனம் செய்வதாகவும், முறையீடுகள் வந்துள்ளதால் இவ்விடயம் பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், இதுபற்றி விளக்கி நேரில் கலந்துரையாட சந்தர்ப்பம் தருமாறும் அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கம் கலாச்சார அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

—

எகிப்தில்

## மாணவிகள் குட்டைபாவாடை அணியத்தடை

கெய்ரோ, ஜூன் 20

எகிப்து நாட்டில் உள்ள பாடசாலைகளில் பரீட்சை எழுதும் மாணவிகள் 'மினி' பாவாடைகளையும், கவர்ச்சி உடைகளையும் அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையை எகிப்து கல்வி இலாகா விதித்துள்ளது இவ்விலாகா அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாணவிகள் கவர்ச்சி உடையணிவதால் பரீட்சைகளைக் கண்காணிக்கும் ஆசிரியர்களின் கவனம் மாணவிகள் பக்கம் செல்கிறது இதனால் அவர்களால் பரீட்சையைச் சரியாகக் கண்காணிக்க முடியவில்லை, ஒழுங்கீனங்கள் நடக்க ஏதுவாகின்றது.

# மிதிபலகைப் பிரயாணம் முற்றாகத் தடை

மீதோட்டமுல்லை, ஞாயிறு

முன்னர் இருந்ததிலும் பார்க்க மிதிப்பலகைப் பிரயாணம் அவசரகாலச் சட்டத்தின் பின்னர் வெற்றிகரமாக முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளதாக இ. போ. ச அறிவித்துள்ளது.

இ. போ. சவின் பஸ் கட்டண உயர்வின் பலனாக அநாவசிய பஸ் பிரயாணமும் பிக்பொக்கட்காரர்களின் தொல்லையும் மிகவும் குறைந்துள்ளதாகவும் தற்பொழுது பஸ் சேவையும் திறம்பட செயல்பட்டு வருவதாகவும் இ. போ. ச. அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இப்பொழுது டிக்கட் வழங்கிய பின்னரே பிரயாணிகள் பஸ்ஸில் ஏற அனுமதிக்கப் படுகின்றனர்.

(வி. நி.)

சோற்றுத்தகராறு

## 9 ஊழியர் தற்காலிக வேலைநீக்கம்

மீதோட்டமுல்லை, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் இலவச உணவு விநியோகம் சம்பந்தமாக எழுந்த தகராறையொட்டி மீதோட்டமுல்லை டிப்போவைச் சேர்ந்த ஒன்பது தொழிலாளர்களை இ. போ. ச. தற்காலிக வேலைநீக்கம் செய்துள்ளது.

அவசரகாலச்சட்டத்தின் பயனாக வேலைமுடிந்து வீடு செல்ல முடியாமல் டிப்போவில் தங்கும் தொழிலாளர்களுக்கு இ. போ. ச. இரவுச் சாப்பாட்டுக்கு ஒரு ரூபா ஐம்பது சதம் வழங்கிவந்தது. சில நாட்களின் பின் டிப்போ அதிகாரிகள் இப்பணத்தை நிறுத்தி மேற்படி டிப்போ கன்டீனில் சோற்றுக்கு ஒழுங்கு செய்தனர். ஆயினும் மேற்படி டிப்போ தொழிலாளர்கள் கன்டீன் சாப்பாடு சரியில்லை என்ற காரணத்தால் அதனை ஏற்க மறுத்தனரென்றும் அதைத் தொடர்ந்து தொழிலாளர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற வாக்குவாதத்தின் பயனாக 9 பேர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(வி. நி)

## சேலைக்குப்பதில் ஷேட்டிங்ஸ்

கோண்டை, ஞாயிறு

இறக்குமதி செய்யப்பட்ட 'ரெட் ரோஸ் கொட்டன்' துணிகள் மலிவு விலையில் தேசிய லொத்தர் சபையின் 352வது சீட்டிழுப்பில் பரிசு பெறும் இலக்கங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

தற்போது பரிசுப் பொருளாக வழங்கப்படும் சாலிகளுக்குப் பதிலாக இந்த ஷேட்டிங்ஸ் வழங்கப்படவிருக்கின்றன. இம்மாதம் 24 ம் திகதி இழுக்கப்படும் சீட்டிழுப்பில் பரிசு பெறும் டிக்கட்டுகளுக்கு யார் 6ரூ-50 சதவீதம் 10யார் துணி வழங்கப்படும்.

... ...

## ஆலோசனைக் கூட்டம்

வேலணை, ஞாயிறு

உணவு அபிவிருத்தித்திட்டம் சம்பந்தமான ஒரு ஆலோசனைக்கூட்டம் வேலணைக்கிராமசபைமண்டபத்தில் நடைபெற்றது.

வேலணை கி. ச. தலைவரும் வேலணை பயிர்ச் செய்கைக் குழுத்தலைவருமான திரு. க. சதாசிவம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றபோது நெற் பசளை, நாற்று முதலியன விநியோகம் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதுடன் உணவு அபிவிருத்திக்கான திட்டமும் தயாரிக்கப்பட்டது.

பயிர்ச்செய்கைக்கு முஉத்தியோகஸ்தர்களும், கமத்தொழில்சேவை நெடும்பாக உத்தியோகஸ்தர் திரு. இராசரத்தினம், வேலணைப் பகுதி உத்தியோகஸ்தர் திரு. ஐயாத்துரை, வேலணை கிழக்குக் கிராமசேவகர் திரு த. வடிவேலு மற்றும் வேலணை ஆரம்ப ப. நோ. கூ. சங்க உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## இளவரசர் பிலிப்பற்றி ஹாஸ்ய எழுத்தாளர்

லண்டன், ஜூன் 20

'பஞ்ச்' எனப்படும் உலகப் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் ஹாஸ்யப் பத்திரிகையின் ஆசிரியரான திரு பேசில் பூத்ரொய்ட் இளவரசர் பிலிப்பின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சுவாரஸ்யமான நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். ஜூன் மாதம் 10-ம் திகதி இளவரசரின் 50வது பிறந்த தினத்தையொட்டி இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. பக்கிங்ஹாம் மாளிகையில் அரசகுடும்பத்தினருடன் ஒருவருடம்வரை தங்கியிருந்து இளவரசர் செல்லும் இடமெல்லாம் சென்று அவரது வாழ்க்கையின் ஹாஸ்யம் ததும்ப அற்புதமாகச் சிருஷ்டித்திருக்கிறார் திரு பூத்ரொய்ட்.

இங்கிலாந்தில் சுமார் 700 சங்கங்கள், சபைகள் இளவரசரை போசகராகக் கொண்டு இயங்குகின்றன என்றும் வருடத்தில் கிட்டத்தட்ட 90 சொற்பொழிவுகளை இளவரசர் நிகழ்த்துவதாகவும் இந் நிகழ்ச்சிகளை வைபவங்களில் வெளிவாரம் பங்குபற்றுவதற்கு வருடத்தில் சராசரி 75,000 மைல்களைவரை அவர் பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது என்றும் இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது.

"1952 ம் ஆண்டு எலிசபெத் மகாராணியாருக்குப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டதை அடுத்து தமக்கென வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் எதுவும் இல்லையென்பதை இளவரசர் கண்டுகொண்டார். ஏனெனில் முடிக்குரிய மகாராணியாரின் பல்வேறு பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் அவருக்கு நேரடியான சம்பந்தமே இருக்கவில்லை. ஆயினும் அவர் தமது மனைவியாரின் ராஜாங்கக் கருமங்கள் சிலவற்றை தாமே பொறுப்பேற்று தமக்கென ஒரு தனித்துவ பாகமொன்றைத் தாமே சிருஷ்டித்துக் கொண்டார்."

இளவரசர் மிகவும் காருண்ய சிந்தையுடையவர் என இந்நூல் ஆசிரியர் கூறுகிறார். ஒரு சமயம் திருமதி மௌளி மார்ட்டின் என்பவர் காலம் சென்ற தமது தந்தையாரின் நூலைப் பிரசுரிக்க முடியாது கஷ்டப்பட்டு இறுதியில் இளவரசரிடம் ஒரு கடிதத்தில் தமது பிரச்சினையை விளக்கினார் இரக்க சுபாவமுடைய இளவரசர் உடனடியாக அந்நூலைப் பிரசுரிக்க உதவினார். அந்நூல் பெருந்தொகையில் விற்பனையாகியது.

"இளவரசர் தமது பிள்ளைகளை மீது ஆழ்ந்த பாசமுடையவர்" எனக் கூறும் திரு. பத்ரொய்ட் அரச குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரது சொல்லுக்கும் மதிப்பளிக்கப்படுவதாகக் கூறுகிறார்.

# நியமனங்கள் வழங்குவதில் பொதுமக்கள் அபிப்பிராயம்

கோட்டை, ஞாயிறு

அரசாங்க சேவையில் நியமனங்கள் வழங்குவதில் சீர்திருத்தங்கள் செய்வதற்கு அரசாங்கம் பொதுமக்களின் குறிப்பாகத் தொழிற்சங்கங்களின் அபிப்பிராயத்தைப் பெறவிருக்கிறது.

பொது நிர்வாக உள்ளூராட்சிமன்ற, உள்நாட்டு விவகார அமைச்சர் திரு பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க சேவைகளில் நியமனங்கள் சம்பந்தமாக வெளியிடப்பட்ட வெள்ளையறிக்கையிலேயே அமைச்சர் பீலிக்ஸ் இதை வெளியிட்டுள்ளார். கம்பியூட்டர் மூலம் நியமனங்கள் வழங்கும் திட்டமும் இந்த வெள்ளையறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை இ. போ. ச. உதவி முகாமையாளர் திரு. வீ. சபாபதி அடுத்த மாதம் முதல் காரைநகர் இ. போ. ச. நிலைய முகாமையாளராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார். இவர் பருத்தித்துறை இ. போ. ச. நிலையத்தின் மக்கள் குழுவின் முக்கிய உறுப்பினராவார்.

......

## சிறுமிமீது பலாத்காரம் புரிந்தாராம்

மீதோட்டமுல்லை, ஞாயிறு

பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 8வயதுச் சிறுமியை பலாத்காரம் புரிந்ததாகக் கூறப்படும் சம்பவமொன்று கிருலப்பனை பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

வழமைபோல் அன்று மாலைநேரம் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுடன் விளையாடச் சென்ற 8வயதுநிரம்பிய இராணி என்னும் சிறுமியை வீட்டில் யாரும் இல்லாத சமயம் பலாத்காரம் புரிந்ததாக 22 வயதுடைய முனியாண்டி சுப்பிரமணியம் என்பவரை பொலிசார் கைது செய்து 14 நாள் றிமாண்டில் வைத்துள்ளனர்.

சிறுமி இராணியைப் பொலிசார் உடனடியாக வைத்திய பரிசோதனைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

(வி. நி)

......

உயர்தர வகுப்புக்கு

## அனுமதி பெறுவது கஷ்டம்

சென்னை, ஜூன் 20

மருத்துவம் அல்லது கலைத்துறையில் பயிலும் பொருட்டு மாணவர்கள் அனுமதி பெறுவது உயர்தர வகுப்பு படிப்பதற்கு அனுமதி பெறுவதிலும் பார்க்க இலகுவானதாகும். அதுவும் 6-வது வகுப்பில் மாணவர்களைச் சேர்ப்பது பெற்றோர்க்கு பெரும் தொல்லைதரும் விடயமாக உள்ளது.

உயர்தரக் கல்லூரிகளில் பயில இடமின்றி விடப்படும் மாணவர்கள் எல்லோரும் தகுதியற்றவர்களெனக் கூற முடியாது. இடமின்மையே காரணமாக உள்ளது. பாடசாலைகளில் பலநேர வகுப்புகளை நடாத்தினால் மாணவர்களின் தொகையினைக் கட்டுப்படுத்தி கற்பிக்க முடியும். இல்லவிட்டால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் எனத் தலைமையாசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

......

## பூநகரியில் காணிக்கச்சேரி

பூநகரி, ஞாயிறு

பூநகரிக் காரியாதிகாரி பிரிவில் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் காணிகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் பூநகரிக் காரியாதிகாரியால் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 226 ஏக்கர் மேட்டுக் காணியும் 176 ஏக்கர் வயல் காணியும் வழங்கப்படவிருக்கின்றன. காணிக்கச்சேரி பூநகரிக் காரியாதிகாரி கந்தோரில் அடுத்த மாதம் 4-ந் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

## டட்லியின் பிறந்ததினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முன்னைநாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று தனது 60-வது பிறந்ததினத்தை அமைதியாகக் கொண்டாடினார். இவர் 1911-ம் ஆண்டு ஜூன் 19-ந் திகதி பிறந்தார்.

......

## வீடு எரிந்து சாம்பலானது

காரைதீவு, ஞாயிறு

புங்குடுதீவிலுள்ள காரைதீவுக் கிராமத்தில் கந்தர் மாணிக்கம் என்பவருக்குச் சொந்தமான வீடு தீப்பற்றி எரிந்தது. பக்கத்தில் திருவிழா நடந்துகொண்டிருக்கும் கோவிலில் நின்றவர்கள் அங்கு விரைந்து தீயை அணைக்க முயன்றும் பலன் கிடைக்கவில்லை. ஊர்காவற்றுறைப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

—...

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் ருத்தலடி புதிய உப தபாற் கந்தோருக்கு "பி" தரத் தபால் அதிபருக்கான விண்ணப்பங்கள் தபாலதிபதியாதிபதியால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதி ஜூலை 17 என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய சகல விபரங்களும் அடங்கிய சுற்றுநிருபங்கள் சுழிபுரத்திலுள்ள பொது ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

......

## போதனாசிரியருக்கு விசேட பயிற்சி

கோண்டை, ஞாயிறு

பதினான்கு விவசாயப் போதனாசிரியர்கட்கு நெல் வேளாண்மையில் இருமாத விசேட பயிற்சியொன்று பேராதனையிலுள்ள கன்னொருவ இலங்கை சேவையாளர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

......

## காணிபெற முயற்சி

அரியாலை, ஞாயிறு

திருநெல்வேலி இளம் விவசாயிகள் கழகத்தைச் சேர்ந்த சுமார் இருபத்தைந்து வாலிபர்களுக்குக் கிளிநொச்சியில் விவசாயக்காணி பெற்றுக்கொடுப்பதற்கு நல்லூர் கிராமசபைத்தலைவர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

### மணிவாக்கு

பாபம் புரிவது மனித இயல்பு. ஆனால் மனிதன் பாபம் புரிவது நிச்சயம் என்பது ஒருபுறமிருக்க, அவனை மீட்பதற்கான வழிகளை இறைவன் ஆக்கிவைக்கிறார் என்பது இருமடங்கு நிச்சயமாக உள்ளது.

—பரமஹம்ஸர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 7-ந் திகதி (21-6-71)

# அலுவலக நேர மாறுதலும் முன்னேற்றமும்

'விடுமுறை தினங்களில் மட்டும் வீட்டில் தங்கி நின்று போகிறாரே ஒருவர், அவர் யார்?' இப்படி ஒரு கேள்வியை ஒரு சிறுவன் தனது தாயிடம் ஒரு சமயம் கேட்டானாம். 'அவர்தான் உனது அப்பா' என்று அந்தத் தாய் பெருமூச்சுடன் பதிலளித்தாளாம்.

காலையில் பிள்ளைகள் கண் விழித்தெழுவதற்கு முன்னரே காரியாலயம் சென்று மாலையில் பிள்ளைகள் நித்திரைக்குப் போன பின் வீடு வந்துசேரும் நிர்ப்பந்த நிலையிலுள்ள குடும்பத் தலைவர்களின் நிலையை எடுத்துக்காட்டுவதற்காகப் புனையப்பட்டதுதான் மேலே நாம் குறிப்பிட்டுள்ள சம்பாஷணையான போதிலும் அர்த்தமுள்ள 'கதை' யென்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

அலுவலக நேரத்தில் இப்போது அரசாங்கம் செய்துள்ள மாறுதல் இதைப் பொய்யாய் பழங்கதையாய் ஆக்கிவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

அந்நிய ஆதிக்கத்தினரால் அவர்களின் வழக்கத்திற்கேற்ப உருவாக்கப்பட்ட அலுவலகநேரம் கடந்த நூற்றி ஐம்பது ஆண்டுகளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதில் இப்போது செய்யப்பட்டுள்ள மாறுதல் சரித்திரத்தையே மாற்றி வைத்த ஒரு பெரிய நிகழ்ச்சியென்றே சொல்ல வேண்டும். நமது நாட்டின் சீதோஷண நிலைக்கும் நம் நாட்டு மக்களின் பழக்கவழக்கத்துக்குமேற்ப புதிய அலுவலக நேரம் அமைந்துள்ளது.

பின் தூங்கிப் பின் எழும் பழக்கத்தையுடைய வெள்ளையர் முன் தூங்கி முன்னெழும் நம்நாட்டு மக்களின் பழக்கத்தைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ற முறையில் அலுவலக நேரத்தைக் கணிக்கத் தவறிவிட்டனர். வாராந்த விடுமுறை நாட்களில் மாறுதல் செய்ய முன்வந்த நம்நாட்டுத் தலைவர்கள் கூட அலுவலக நேரத்தில் மாறுதல் செய்யத் தவறியது ஆச்சரியந்தான். காலையில் எட்டு மணிக்கு வேலையை ஆரம்பித்து பிற்பகலில் மூன்றரை மணிக்கு வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புவதால் வேலையும் சுறுசுறுப்பாக நடைபெறுவதுடன் பொதுமக்களும் அரசாங்க இலாகாக்களில் தமக்குள்ள கடமைகளைத் தாமதமின்றிச் செய்துமுடிக்கவும் வசதி கிடைக்கிறது. அதுவுமன்றி காலையில் வேலைக்குச் செல்லும் குடும்பத் தலைவன் மாலையில் நேரத்துக்கே வீடு திரும்பித் தனது குடும்பக்கடமைகளையும் நிறைவேற்றி 'பிள்ளைக்கு அப்பாதான், தான்' என்பதையும் உணர்த்த முடியும்!

இதே சமயம் காலையில் உரிய நேரத்துக்கு அலுவலகங்களுக்கு ஊழியர் போய்ச் சேரக்கூடிய முறையில் போக்குவரத்து சேவைகளை ஒழுங்கு செய்யவேண்டியது அவசியமென்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

அரசாங்க அலுவலக நேரங்களில் மாறுதல் செய்திருப்பது மட்டுமன்றி அரசாங்க ஊழியர்கள் மத்தியில் ஒழுங்கு கட்டுப்பாடு ஆகியவற்றில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் இன்றைய நெருக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப் பொதுமக்கள் மட்டுமல்ல அரசாங்க ஊழியர்களில் பலருமே நிச்சயம் வரவேற்பர்.

நண்பகல் உணவுக்காக விடப்படும் ஒரு மணி நேர இடைவேளையைத் தவிர இதர நேரத்தில் ஊழியர்கள் அனைவரும் தமது ஆசனத்திலமர்ந்து தமது கடமைகளைச் செய்யவேண்டுமென்றும் சிற்றுண்டிச்சாலைகள் நண்பகலில்தான் திறக்கப்பட வேண்டுமென்றும் எந்த ஊழியர் எங்கு சென்றாலும் அறிவித்துச் செல்ல வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. லீவு பெறுவதில் கடும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊழியரும் சிறப்பாக திறமையாகத் தங்கள் வேலைகளை செய்துமுடிக்க வேண்டுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

எங்கள் நாட்டில் மூன்று லட்சம் பேர் அரசாங்க ஊழியர்களாக இருக்கின்றனர். கணிசமான அளவு கைநிறைந்த சம்பளம், ஓய்வுபெற்றபின் பென்ஷன், சேவைக்காலத்தில் வசிப்பதற்கு விடுதி. இலவச ரயில் விமானப் பிரயாணம் நிலம், வீட்டுக் கடன்வசதி தாராளமான விடுமுறை, லீவு போன்ற இத்தனை வாய்ப்பும்வசதிகளும் இவர்களுக்கு இருப்பதால் "கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்து உத்தியோகம்" என்று கூறி இன்றும் இவர்களுக்கு கலியாண மார்க்கட்டில் 'மதிப்பு' உயர்ந்திருப்பது நாடறிந்த விஷயம்.

மாறுதல் செய்யப்பட்ட புதிய அலுவலக நேரம் சிலருக்குச் சிறிது சிரமத்தைக் கொடுத்தாலும் நாட்டின் பொருளாதார சமூக முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு ஆற்றலின்மை, லஞ்சஊழல், பொதுப் பணத்தை வீண்விரயம் செய்தல் ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டைச் சுபீட்சப் பாதையில் வழிநடத்தி முன்னேறிச் செல்வதற்கு அரசாங்க ஊழியர் ஒழுங்கும் கட்டுப்பாடுமுள்ள பட்டாளத்தின் சுத்த வீரர்களைப்போல் முன்வந்து பணியாற்ற வேண்டும்.

அரசாங்கஊழியர் காட்டும் முன்மாதிரியில்தான் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியரும் தனியார் துறை ஊழியரும் நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு ஒரு நிமிஷத்தைக்கூட வீணாக்காது ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கடினமாக உழைத்து நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதும் சுபீட்சப் பாதைக்கு எட்டி நடைபோடுவதும் தங்கியிருக்கிறதென்று நம்பலாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 21—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

334 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கிறிஸ்தவநற்சிந்தனை 6-20 தனிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 கல்விச் சேவை

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 6-45 வீட்டுவைத்தியம், 7-15 வயலின், 7-45 குறளிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித்தொகுப்பு.

## "தையற்கலையில் சிங்களப்பெண்கள்"

தாவடி, ஞாயிறு

தையற்கலையிலே சிங்களப் பெண்மணிகள் கைதேர்ந்தவர்கள் அவர்கள் தயாரிக்கும் உடைகள் சிறுபோதும் ... என்பவற்றிலிருந்து தையற்கலையில் அவர்கள் திறமையை நாம் அறிந்துகொள்ளலாம்.

தாவடிக்கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்பட்டுவரும் அரசினர் தையற்பயிற்சி நிலையத்துக்கு விஜயம் செய்த இலங்கைகிராம அபிவிருத்தி இலாகாவின் அதிகாரி திருமதி ஜி போறகேயை வரவேற்றுப்பேசிய, கிராமமுன்னேற்றச்சங்க உப தலைவர் இளைப்பாறிய டாக்டர் கு. தம்பையா மேற்கண்டவாறு கூறினார்.

தையற் போதனாசிரியை திருமதி அ. ஜெகதாம்பாள் திருமதி போறகேயை மலர் மாலைசூட்டி வரவேற்றார். தேநீர்விருந்தொன்றும் அளிக்கப்பட்டது.

## தென்பகுதி கைப்பணியாளருக்கு அரசாங்க உதவி

கோட்டை, ஞாயிறு

தென்பகுதியிலுள்ள கைப்பணியாளர்களுக்கு அரசாங்கம் உதவிசெய்யத் தீர்மானித்துள்ளது.

இப்பகுதியில் உள்ள 44 பிராந்திய அபிவிருத்தி மன்றங்களும் கைப்பணி நிலையங்களை நிறுவி இங்குள்ள மக்களுக்கு பல்வேறு கைப்பணிகளைப் பயிற்றுவிக்கவுள்ளன. கதிரைபின்னல், கயிறு திரித்தல், பெட்டி, பாய், கூடை முதலியதொழில்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளன.

## பூநகரியில் பயங்கர கால்நடை நோய்

பூநகரி, ஞாயிறு

பூநகரிப்பகுதியில் கடந்த சில தினங்களாகத் துரிதமாகப்பரவி வரும் பயங்கர நோயினால் இருநூறுக்குமதிகமான மாடுகளும் எருமைகளும் பலியாகியுள்ளன. இதனால் கால் நடைச்சொந்தக்காரர்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர். உடனடியாக நோய்த்தடை ஊசி ஏற்றி இந்நோய் பரவாமல் தடை செய்து கால்நடைகளை காப்பாற்றுமாறுகோரி அவசரத்தந்திகள் இளைஞர் விவசாய முடக் காரியதரிசி செல்வன் து. மயில்வாகனத்தால் யாழ்ப்பாணம் சாவகச்சேரி அரசினர் மிருகவைத்தியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது இவ்வாறு இருக்க பூநகரிப் பகுதியில் பரவிவரும் இந்தக் கால் நடை நோயினால் தாயை இழந்து கன்றுகளும், கன்றுகளை இழந்து பசுக்களும் கத்திக்கதறித் திரியும் காட்சி மிகவும் பரிதாபகரமானதாய் உள்ளது. சில வயல் வெளிகளில் அநேக மாடுகள் இறந்து கேடுவாற்றுக் கிடந்து வாயில் துர்நாற்றமும் வீசத் தொடங்கியுள்ளது.

## இனித்தான் விவாதிக்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

"அரசாங்க ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் வெளியில் சிகிச்சையளிப்பதை நிறுத்தி ஆஸ்பத்திரியில் நோயாளிகளிடம் ஓரளவு கட்டணம் பெற்று சிகிச்சை அளிக்க அனுமதிக்கவேண்டும்" என்று கூறும் தீர்மானம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியதாக நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி சரியல்லவென்றும் இக்கமிட்டியின் அடுத்த கூட்டத்திலேயே இப்பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாகவும் ஆஸ்பத்திரிச் செயலாளர் தெரிவிக்கிறார்.

## கடல்பாலம்: திட்டம் பூர்த்தி

சென்னை, ஜூன் 20

மண்டபத்துக்கும் - ராமேஸ்வரத்துக்குமிடையில் கடல் மீது போடப் படவிருக்கும் பாலம்சம்பந்தமான நகல் திட்டத்தை மத்திய அரசு பூர்த்திசெய்திருக்கின்றது. இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க 5 கோடி 35 லட்சம் ரூபா செலவாகும்.

## இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சந்தர்மடம் பழம் றோட் சித்திவிநாயகர் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது.

கடந்த 10ந் திகதி ஆரம்பமான இவ்வாலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் முடிவடைகின்றது. நாளை மாலை 8 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 4 மணிக்கு தேர்ப் பவனியும் நடைபெறவிருக்கின்றது. (கு. த. நி)

## சிறிமா சாஸ்திரி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னனர்.

இதுவரை 18136 பேர் இலங்கைப் பிரஜைகளாகியுள்ளனர். இத்தகவலையும்பிரதமர் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் விருப்பங்களுக்கு ஏற்றமுறையிலே ஐ.தே.கட்சி நடக்க முயன்றதால் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தவாசகத்தை ஐ.தே.க. மீறி நடந்துள்ளது என்று பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று சபையில் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் சபை மீண்டும் ஜூலைமாதம் 9-ம் திகதி கூடவுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோயில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் மீ 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கி.ச.தலைவர் பதவிநீக்கம்

கோட்டை, ஞாயிறு

வலல்லவிட்ட பட்டினசபைத் தலைவர் பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். ஒழுங்கீனம், துஷ்பிரயோகம் போன்ற குற்றங்களின்மீது இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## புதிய அதிபருக்கு வரவேற்பு

'யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையிலேயே முதல் தரமான கல்லூரியாக விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திரு. மு. கார்த்திகேசன் எமது கல்லூரிக்கு அதிபராக வந்திருப்பது குறித்து இந்தக்கல்லூரி ஆசிரியர், மாணவர்கள் மற்றும் இப்பகுதி மக்கள் அனைவரும் பெருமைப்படுகிறோம். அவரது அயராஉழைப்பால் எமது கல்லூரி வளர்ச்சியுற்று நமது நாட்டிலுள்ள தரமான கல்லூரிகளுள் ஒன்றாகத் திகழுமென எதிர்பார்க்கிறோம்'.

இவ்வாறு கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியின் புதிய அதிபராகப் பதவியேற்றுள்ள திரு மு கார்த்திகேசனை வரவேற்றுப் பேசிய திரு ஏ கனகசிங்கம் குறிப்பிட்டார்.

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி ஆசிரியர்கழகத்தின் சார்பில் நேற்றுமுன்தினம் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இவ்வரவேற்பு வைபவத்தில் பல ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டு புதிய அதிபரைப் பாராட்டிப் பேசினர்.

## கிழக்குப்பாக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமான இந்தியாவின் கொள்கை மாறக்கூடுமா என்று நிருபர்கள் கேட்டபோது 'நீண்டகால அடிப்படையில் நாட்டின் நலனை உத்தேசித்து இம் மாதிரி கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன என்று அவர் பதிலளித்தார்.

## மர்மக் கொலை

உருவெல, ஞாயிறு

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த லொக் சுப்பிரின்டன் திரு சிறில் விஜேரட்ன அவரது இல்லத்தில் இம்மாதம் 16-ம் திகதி கொலை செய்யப்பட்டுக் கிடக்கக்காணப்பட்டார்.

இவரதுகொலை மர்மமாகவுள்ளது. நள்ளிரவில் நடைபெற்ற மர்மக்கொலை சம்பந்தமாகத் துப்புத்துலக்க பொலிஸ்நாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பொலிசாரும் இதுசம்பந்தமாகத் தீவிரவிசாரணை நடாத்தி வருகின்றனர்.